வணக்கம்

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி 12.07.2025** **நேரம் மாலை 6.10 மணி**

---

**தலைப்புச் செய்திகள்**

நாட்டுக்கு சேவையாற்றுவதை இளைஞர்கள் குறிக்கோளாக கொள்ள வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலிறுயுத்தி உள்ளார்.

தமிழகத்தின் செஞ்சிக் கோட்டை உட்பட 12 கோட்டைகளுக்கு யுனெஸ்கோ பாரம்பரிய அங்கீகாரம் கிடைத்திருப்பதற்கு பிரதமர் திரு நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

தென் மாநிலங்கள் வளர்ச்சி அடைந்தால் மட்டுமே பிரதமரின் வளர்ச்சியடைந்த பாரதம் என்ற தொலைநோக்கு பார்வை நனவாகும் என மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இந்திய ஆயுஷ் நிறுவனம், புனிதமான சுஷ்ருத ஜெயந்தியை கொண்டாடும் வகையில், நாளை முதல் 3 நாட்களுக்கு ஷாலியாகான் என்ற தேசிய கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

ரோஜ்கர்ே□ளா 1 (18)

ரோஜ்கர் ே□ளா 2 (19)

ஊக்கத்தொகையுடன் கூடிய வேலை வாய்ப்பு திட்டத்திற்கு தமது அரசு ஒப்புதல் அளித்திருப்பதாக பிரதமர் தெரிவித்தார். இத்திட்டத்தின் கீழ், 3 கோடியே 50 லட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்க 1 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். நாடு முழுவதும் இன்று 47 இடங்களில் நடைபெற்ற இந்த வேலை வாய்ப்பு திருவிழாவில் புதிய பணியாளர்கள், ரயில்வே, உள்துறை, பணியாளர் மற்றும் பொது

குறை தீர்ப்பு மற்றும் ஓய்வூதியம், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு, வருவாய், அஞ்சல், உயர்கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சேர உள்ளனர். தமிழகத்தில் நடைபெற்ற இந்த வேலை வாய்ப்பு திருவிழாவில் பங்கேற்று பேசிய மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன், ரோஜ்கர் மேளா புது வேலை வாய்ப்புகளை மட்டும் வழங்குவது அல்ல. வரும் 2047 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவதற்கான நடவடிக்கை என்று கூறினார். நிகழ்ச்சியில் அவர் 251 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். பிரதமர் திரு நரேந்திர மோடி வாக்குறுதி அளித்தபடி, 1 வருடத்திற்குள் 10 லட்சம் வேலை வாய்ப்புகளை வழங்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தாங்கள் பாடுபட்டு வருவதாகவும் அவர் கூறினார். இந்தியாவின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் இளைஞர்களுக்கு முக்கிய பங்கு உண்டு என்றும் அவர் தெரிவித்தார்.

*யுனெஸ்கோ* 1 (12)

இந்தியாவின் மராட்டிய இராணுவ நிலப்பரப்புகள், தமிழகத்தில் உள்ள செஞ்சிக் கோட்டை உட்பட 12 முக்கிய கோட்டைகளுக்கு யுனெஸ்கோ பாரம்பரிய அங்கீகாரம் கிடைத்திருப்பதற்கு பிரதமர் திரு நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த நிலப்பரப்பில் 11 கோட்டைகள் மகாராஷ்டிராவிலும், ஒரு கோட்டை தமிழகத்தில் இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டி உள்ளார். இந்த ராணுவ நிலப்பரப்புகளுக்கு கிடைத்துள்ள அங்கீகாரம் ஒவ்வொரு இந்திய குடிமகனையும் உற்சாகம் அடைய செய்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். மராட்டிய பேரரசர்களின் தொன்மை வாய்ந்த வரலாற்றை எடுத்துரைக்கும் இந்த 12 கோட்டைகளுக்கு பொதுமக்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு……

(வாய்ஸ்)

*யுனெஸ்கோ 2* (15)

(வாய்ஸ்)

இந்தியாவின் மராட்டிய இராணுவ நிலப்பரப்புகள் மற்றும் தமிழகத்தின் செஞ்சிக் கோட்டை உள்ளிட்ட 12 கோட்டைகள், கடந்த 2024 ம் ஆண்டு உலக பாரம்பரிய குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. பல்வேறு தொழில்நுட்ப கூட்டங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் மற்றும் தலங்களுக்கான சர்வதேச கவுன்சிலின் பரிசீலனைக்கு பின்னர் நேற்று மாலை பாரீசில் நடைபெற்ற 47 ஆவது யுனெஸ்கோ கூட்டத்தில் இந்த 12 பாரம்பரிய நிலப்பரப்புகள், யுனெஸ்கோ விருது பெற்றுள்ளன. கி.பி 17 முதல் 19 ஆம் நூற்றாண்டு கால இந்த கோட்டைகளை யுனெஸ்கோ பாரம்பரிய சொத்துக்களாக அறிவித்துள்ளது. தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்துள்ள செஞ்சிக் கோட்டை கிழக்கின் ட்ராய் என்றும் அழைக்கப்படுகிறது. கி.பி 12 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக கருதப்படும் செஞ்சிக் கோட்டை சோழர்கள், விஜயநகர நாயக்கர்கள், மராட்டியர்கள், முகலாயர்கள், பிரெஞ்சுக்காரர்கள் மற்றும் பிரிட்டீஸ் உள்ளிட்ட அடுத்தடுத்த பேரரசுகளால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இது, கிருஷ்ணகிரி, ராஜகிரி, சந்திராயன் துர்க் ஆகிய 3 மலைகளை அரணாக கொண்டுள்ளது.

*அமித் ஷா* (12)

தென் மாநிலங்கள் வளர்ச்சி அடைந்தால் மட்டுமே பிரதமர் திரு நரேந்திர மோடியின் வளர்ச்சியடைந்த பாரதம் என்ற தொலைநோக்கு பார்வை நனவாகும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார். வளர்ச்சி அடைந்த கேரளா என்பது வளர்ச்சியடைந்த பாரதத்தின் ஒரு பகுதியாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இன்று அவர் கேரள மாநிலம் திருவணந்தபுரத்தில் நடைபெற்ற பாரதிய ஜனதா கட்சியின் வார்டு அளவிலான தலைமை கூட்டத்தில் பங்கேற்று பேசினார். ஊழல் இல்லாத நிர்வாகம் என்பது பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வை என்றும், அது கேரளாவின் வளர்ச்சிக்கு அடிப்படை என்றும் அவர் வலியுறுத்தினார். முன்னதாக இன்று காலை அவர் திருவனந்தபுரத்தில் பாரதிய ஜனதா கட்சியின் புதிய மாநில அலுவலக கட்டிடத்தை திறந்து வைத்தார்.

*நிர்□லா* (12)

வடகிழக்கு மாநிலங்களை அதிகாரம் பெற்றவையாக மாற்ற மத்திய அரசு முயற்சி எடுத்து வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். மேகாலயா மாநிலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசிய அவர், ஆயிரத்து 87.81 கோடி ரூபாய் மதிப்பலான பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டங்களை தொடக்கி வைத்து பேசினார். மாநிலங்களின் மூலதனத்திற்கு சிறப்பு நிதியாக ஒதுக்கப்பட்ட 5 ஆயிரத்து 400 கோடி ரூபாயை மேகாலயா அரசு முழுமையாக பயன்படுத்தி உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். வடகிழக்கு பிராந்தியத்தை வலுப்படுத்தவும், மாற்றி அமைக்கவும் மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். மேலும், ஜல் ஜீவன் இயக்கம், பிரதமரின் ஆவாஸ் யோஜனா திட்டம், தூய்மை பாரத இயக்கம் போன்ற திட்டங்களை மாநில அரசு சிறப்பாக செயல்படுத்தி வருவதை அவர் பாராட்டினார்.

*சுஷ்ருத ஜெயந்தி 1* ( 4)

புதுடெல்லியில் உள்ள அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம், புனிதமான சுஷ்ருத ஜெயந்தியை கொண்டாடும் வகையில், நாளை முதல் 3 நாட்களுக்கு ஷாலியாகான் என்ற தேசிய கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்துள்ளது. இதுகுறித்த ஒரு செய்தித்தொகுப்பு......

(வாய்ஸ்)

*சுஷ்ருத ஜெயந்தி* 2 ( 16)

(வாய்ஸ்)

அறுவை சிகிச்சையின் தந்தை என்று போற்றப்படும் புகழ்பெற்ற ஆச்சாரியா சுஷ்ருதரை நினைவு கூரும் வகையில் ஆண்டு தோறும் ஜூலை 15 ஆம் தேதி சுஷ்ருத ஜெயந்தி கொண்டாடப்படுகிறது. இந்த தேசிய கருத்தரங்கில் பொது அறுவை சிகிச்சைகள், ஆசனவாய் அறுவை சிகிச்சைகள் மற்றும் சிறுநீரக அறுவை சிகிச்சைகள் உள்ளிட்ட நேரடி அறுவை சிகிச்சை செயல் விளக்கங்கள் இடம் பெறுகின்றன. முதல் நாளில் 10 பொது எண்டோஸ்கோப்பிக், லேபராஸ்கோப்பிக், அறுவை சிகிச்சைகள் செய்யப்பட உள்ளன. 2 வது நாளில் 16 அனோரெக்டல் அறுவை சிகிச்சை, நேரடி அறுவை சிகிச்சை முறைகள் செய்யப்பட உள்ளன. இந்த அறுவை சிகிச்சைகளை பங்கேற்பாளர்கள் கவனித்துக் கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இறுதிநாளில் 200 க்கும் மேற்பட்ட வாய்மொழி மற்றும் சுவரொட்டி விளக்க காட்சிகள் இடம் பெற உள்ளன. இதன் தொடர்ச்சியாக அறிவுசார்ந்த உரையாடல்கள் இடம் பெற உள்ளன. இந்த கருத்தரங்களில் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து 500 க்கும் மேற்பட்ட புகழ்பெற்ற அறிஞர்கள், அறுவை சிகிச்சை நிபுணர்கள். ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் பங்கேற்பார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

*அமை□ச்சர் நியம□னம்(7)*

புதுச்சேரியில் அமைச்சராக இருந்த திரு சாய் சரவணன் குமார் தமது பதவியை ராஜினாமா செய்ததை தொடர்ந்து, அவருக்கு பதிலாக புதிய அமைச்சராக பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு ஜான்குமார் புதிய அமைச்சராக நியமிக்கப் பட்டுள்ளார். அவர் வருகிற திங்கட்கிழமை பதவி ஏற்க உள்ளார். அவருடன் நியமன சட்டமன்ற உறுப்பினர்களாக திரு வி செல்வம், திரு தீப்பாய்ந்தான், மற்றும், திரு ராஜசேகரன் ஆகியோரும் பதவி ஏற்க உள்ளதாக மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கின்றது.

*புரிந்துணர்வு ஒப்பந்தம்* (10)

நாடு முழுவதும் விளையாட்டை மேம்படுத்த பிரசார் பாரதியுடன் இணைந்து இந்திய ஹேண்ட்பால் சங்கம், அடுத்த 3 ஆண்டுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்த நிகழ்ச்சிகள் டிடி ஸ்போர்ட்ஸ், வேவ்ஸ் ஒடிடி, மற்றும் பிற பிரசார் பாரதி தளங்களில் ஒலிபரப்பப்படும். இந்த ஒப்பந்தத்தை பிரசார் பாரதி தலைமை நிர்வாக அதிகாரி திரு கவுரவ் திவேதி மற்றும் இந்திய ஹேண்ட்பால் சங்கத்தின் நிர்வாக இயக்குநர் திரு ஆனந்தேஷ்வர் பாண்டே ஆகியோர் பரிமாறிக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் பிரசார் பாரதியின் தலைவர் திரு நவ்நீத் குமார் சேகலும் பங்கேற்றார். நாட்டில் விளையாட்டின் ஆர்வத்தை அதிகரிக்கவும், திறமையை வளர்ப்பதற்கும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் செயல்படுத்தப்படுகிறது.

விமான விபத்து (9)

அகமதாபாத் ஏர் இந்தியா விமான விபத்துக்கு 2 இன்ஜின்களுக்கு செல்லும் எரிபொருள் தடைப்பட்டதே காரணம் என்று முதல் கட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக விமான விபத்து புலனாய்வு அமைப்பு தாக்கல் செய்துள்ள அறிக்கையில், விமானம் புறப்பட்ட சில நிமிடங்களில் திடிரென 2 இன்ஜின்களுக்கான எரிபொருள் தடைப்பட்டதை அடுத்து, விமானம் கட்டிடத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. விமான எரிபொருளில் எந்தவிதமான கலப்படமும் இல்லை என ஆய்வில் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும், இது தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கிரிக்கெட் (4)

இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கு இடையே 5 வது மற்றும் இறுதி 20-20 மகளிர் கிரிக்கெட் போட்டி பர்மிங்காமில் இன்றிரவு நடைபெற உள்ளது. 5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா ஏற்கனவே 3-1 என்ற கணக்கில் வெற்றி பெற்று முன்னிலையில் உள்ளது.